## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.** 54/2021

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05 ம் நாள் வியாழன்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியில் 9 வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.க.ராக்கப்பன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : | பிரகாசம் | **தொழில்** : | விவசாயம் |
| **தந்தை/கணவர் பெயர்** : | விடங்கன் | **சமயம்** : | இந்து |
| **ஊர்** : | பொாக்கன்விடுதி தெற்கு கிராமம் | **வயது** | 70 |
| **தாலுக்கா** : | பட்டுக்கோட்டை | **சாதி**: | - |

**05.10.2023**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 15.12.1949-ல் தாவா சொத்தை எனது தந்தை விடங்கன் சோவை சுந்திரராசு செட்டியாரிடமிருந்து கிரயம் வாங்கப்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 11.12.2019 ல் நான் தாவா சொத்திற்கு பட்டா கேட்டு பட்டுக்கோட்டை வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் கை நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 15.02.2020 ல் நான் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு கேட்டு பட்டுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் கை நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 04.02.2021 ல் நான் திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்தில் 1,2 பிரதிவாதிகள் பெயரில் கொடுத்த புகாரின் கை நகல் **வா.சா.ஆ.4**

ஆகும். 17.02.2021ல் தாவா சொத்திற்குண்டான கணினி வழி மதிப்பு சான்று நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 23.02.2021ல் 2ம் எதிர்வாதி எனக்கு அனுப்பிய கேவியட் மனுவின் சார்பு நகல் **வா.சா.ஆ.6** ஆகும். தாவா சொத்தில் நான் குடியிருந்து வரும் கூரை வீட்டிற்கு நான் செலுத்திய வீட்டு வரி ரசீது ( எண்ணிக்கை 9) **வா.சா.ஆ.7** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.